DRNO1 1882/2023 இ1

19 SEP 2023

சுருக்கம்

பொதுப்பணிகள் - தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – செய்தி மக்கள் தொடர்புத் துறை – பணியில் இருக்கும் போது காலமான திரு.எஸ். வாசுதேவன், வாகன சீராளர் என்பவரின் மகன் திரு. வா.கவியரசு, இளநிலை உதவியாளர் பதவியில் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி (நிர்.3.2) த் துறை

அரசாணை (ப) எண்.128

நாள்: 14.09.2023
திருவள்ளுவர் ஆண்டு 2052
ஆவணி 28-ஆம் நாள்

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (க்யூ.-1)த் துறை, நாள்.23.01.2020.
2. இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு மற்றும் அலுவலால் அரசு துணைச் செயலாளர் நடவடிக்கை எண்.17553/நிர்.3.2/2021, நாள். 09.02.2022.
3. இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம், சென்னை கடிதம் எண்.374/இ1/தஅ/ 2023, நாள் 20.02.2023.

*****

ஆணை:

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் தலைமையிடத்தில் வாகன சீராளராகப் பணிபுரிந்து 05.11.2012 அன்று பணியில் இருக்கும் போது காலமான திரு. வாசுதேவன் என்பவரின் வாரிசுதாரரும் மகனுமான திரு. வா. கவியரசு என்பவருக்கு மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட நடவடிக்கையின்படி கருணை அடிப்படையில், சென்னை தமிழரசு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, தனியர் 11.02.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருவதால், தமிழரசு அலுவலகம், இணை இயக்குநர் (வெளியீடுகள்) பரிந்துரையை ஏற்று, அன்னாரின் பணியை வரன்முறை செய்து தருமாறு இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. தனியர் பணிவேண்டி அரசுக்கு சமர்ப்பித்த ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்ததில், மறைந்த அரசு ஊழியர் தகுதிகாண் பருவம் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன் திரு. வா.கவியரசு, கருணை அடிப்படையில் பணிநியமனம் கோரி 22.11.2013

......2

அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 04.12.1991 என்றும், அரசு ஊழியர் இறந்த நாளில் தனியரின் வயது 20 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 22 என்றும், பணி நியமன [illegible]ல தனியரின் வயது 31 என்றும், அவர் பன்னிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணிநியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரியவருகிறது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட இணை இயக்குநர் (வெளியீடுகள்), தமிழரசு அலுவலகம் பரிந்துரையுடன் செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால், மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின்னர், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள திரு. வா. கவியரசு என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், சென்னை தமிழரசு அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 11.02.2022 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு முன்தேதியிட்டு பணிவரன் முறை செய்யப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை பெற உரிய விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறையின் அ.சா.கு எண். 4975/டி-1/2023, நாள்.12.07.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண். 5365702/ஜ 1/2023, நாள். 04.09.2023 - இல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா. செல்வராஜ்,
அரசு செயலாளர்.

பெறுநர்
திரு. வா. கவியரசு, இளநிலை உதவியாளர்,
தமிழரசு அலுவலகம், சென்னை-113. (உரிய வழியாக)
இணை இயக்குநர் (வெளியீடுகள்),
தமிழரசு அலுவலகம் (ம) அச்சகம்,
எண்.5, ராஜீவ் காந்தி சாலை, கானகம், தரமணி, சென்னை-113.

நகல்:
தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு. /உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்.